<u>அரசன் கணேசன் பாலிடெக்னிக் கல்லூரி, சிவகாசி</u>

## <u>தேசிய நூலக தின விழா</u>

சிவகாசி அரசன் கணேசன் பாலிடெக்னிக் கல்லூரியில் "தேசிய நூலக தின விழா" கொண்டாடப்பட்டது. இந்திய நூலக அறிவியலின் தந்தை எனப் போற்றப்படும் எஸ்.ஆர்.ரெங்கநாதன் அவர்களின் பிறந்த தினமான ஆகஸ்டு 12ஐ நினைவு கூறும் முகமாக ஆண்டு தோறும் கொண்டாடப்படும் இவ் விழா ஒருநாள் முன்னதாக 11.08.2023 வெள்ளிக்கிழமையன்று நூலக கருத்தரங்கக் கூடத்தில் வைத்துக் கொண்டாடப்பட்டது. விழாவில் கல்வி அதிகாரி எம். புகழ் வரவேற்றுப் பேசினார்.

கல்லூரி முதல்வர் முனைவர் எம். நந்தகுமார் தலைமையேற்றுப் பேசினார். நூலகம் என்பது பல நூற்றாண்டு அறிஞர்கள் நூல் வடிவில் கூடியிருக்கும் இடம். வருங்கால அறிஞர்கள் படைத்தளிக்கப்போகும் புத்தகங்களைத் தாங்கி நிற்பதற்காக காத்திருக்கும் அறிவுத் திருக்கோயில். இந்த கோயிலின் கதவுகள் மாணவர்களுக்காக எப்போதும் திறந்தே இருக்கிறது. ஒவ்வொரு மாணவரும் வந்து படித்து பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்..

அச்சுத்துறையின் 2007 பிரிவு மாணவர் செந்தில்குமார் அன்பளிப்பாக வழங்கிய ரூ.38,000 மதிப்புள்ள பகவத்கீதை புத்தகத்தில் இடம்பெற்றிருந்த அச்சுத் தொழில் நுட்பம் மற்றும் வடிவமைப்பு பற்றி விரிவாகப் பேசி வருங்காலத்தில் நடப்பு மாணவர்களும் கருத்துள்ள புத்தகங்களை படிப்பதோடு மட்டுமல்லாது அதனைப் பதிப்பிப்பதிலும் உங்களின் பங்கு இருக்க வேண்டும் என்று வாழ்த்திப் பேசினார்.




நூலகர் முனைவர் C. ராமசுப்பிரமணியன் பேசும்போது அனைத்து துறை மாணவர்களும் படித்து தங்கள் பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களை தீர்த்துக்கொள்வதற்காக மொத்தம் 30,600 புத்தகங்களும் பக்தி மற்றும் பொது அறிவு நூல்களும் டி.என்.பி,எஸ்சி, ரயில்வே போன்ற போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்டு வெற்றி பெறுவதற்கான நூல்களும் இருப்பதாக தனது உரையின்போது குறிப்பிட்டார்.

*தொடர்ச்சி..2..*

கணிப்பொறித்துறை மூன்றாம் ஆண்டு மாணவர் M.மனோஜ் இந்திய நூலக அறிவியலின் தந்தை எனப் போற்றப்படும் எஸ்.ஆர்.ரெங்கநாதன் அவர்களைப் பற்றி நினைவு கூர்ந்து பேசினார்.

விழாவை முன்னிட்டு பேப்பர் பிரசண்டேசன் போட்டி (Paper presentation), திருக்குறள் கண்டு பிடித்தல் போட்டி (Track Kural), பொது வினாடி-வினா போட்டி (GK - Quiz), ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டது. மொத்தம் 140 மாணவர்கள் கலந்து கொண்ட இந்தப் போட்டிகளை முதலாம் ஆண்டு துறைத்தலைவர் எஸ்.வி.இளங்கோவன், மெக்கானிக்கல் விரிவுரையாளர், ஆர்.ரவிசந்திரன் கணிப்பொறித்துறை விரிவுரையாளர், ஜி.வித்யாஸ்ரீ ஆகியோர் நடுவர்களாக இருந்து நடத்தினர்.

பேப்பர் பிரசண்டேசன் போட்டியில் முதல்பரிசு R.கருப்பசாமி மூன்றாம் ஆண்டு இயந்திரவியல் துறை, இரண்டாம் பரிசை மூன்றாம் ஆண்டு இயந்திரவியல் துறை K.சஞ்சை, மூன்றாம் பரிசை P.விஸ்வபாரதி, சிவில் துறை, முரளிதரன், கணிப்பொறித்துறை, R.அபிசேக் மற்றும் முத்துராமலிங்கம் முதலாம் ஆண்டு ஆகியோர் இனைந்து பெற்றனர்.

திருக்குறள் கண்டுபிடித்தல் போட்டியில் மூன்று பரிசுகளையும் சிவில் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் முறையே பகவதிப் பிரியா, L. வேல்பாண்டியன், பிரியதர்ஷிணி ஆகியோர் பெற்றனர்.

வினாடி-வினா போட்டியில் முதல் பரிசு மின்னியல் துறை மாணவர்கள் N.ஹரிகரன், R.ராஜரிசிகேஷ் ஆகியோர் பெற்றனர். இரண்டாம் பரிசை கணிப்பொறித்துறை மூன்றாம் ஆண்டு மாணவர்கள் M.அன்புகிருஷ்ணன், ஹரிவிக்ரம் L.வேல்பாண்டியன் ஆகியோரும், மூன்றாம் பரிசை முதலாம் ஆண்டு A.ஜெயசூர்யா, R.கருப்பசாமி மூன்றாம் ஆண்டு இயந்திரவியல் துறை ஆகியோர் பெற்றனர். வெற்றிபெற்ற மாணவர்களுக்கு புத்தகங்கள் பரிசளிக்கப்பட்டது.

விழா நிறைவில் உதவி நூலகர் மாரிமுத்து நன்றி கூறினார். விழாவுக்கான ஏற்பாடுகளை உதவி நூலகர் ஜெயலட்சுமி செய்திருந்தார்.

**முதல்வர்**